ஸ்ரீ:



ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ சடகோபாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ராமானுஜாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வேதாந்ததேசிக யதீந்த்ர மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா சேவக
ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ நாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

# நாலாயிர திவ்ய ப்ரபந்தம்

# திருவெழுக்கூற்றிருக்கை


## ஸ்ரீ அஹோபில மட தயாரிப்பு

*(May 2000)*



This version of 4000 Dhivya Prabhandham is prepared by a group of Sri Vaishnavas from Bahrain for Sri Ahobila Muth for easy recitation of the verses. Use of this MS-Word document for commercial purposes is prohibited. For more information contact Sri Venkat at rmvenkat@yahoo.com.

தனியன்கள்:

வாழிபரகாலன் வாழிகலிகன்றி*
வாழி குறையலூர் வாழ்வேந்தன*— வாழியரோ—
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்* மங்கையர்கோன்—
தூயோன் சுடர்மான வேல்!

சீரார் திருவெழு கூற்றிருக் கையென்னும் செந்தமிழால்*
ஆராவமுதன் குடந்தைப் பிரான் தன் அடியிணைக்கீழ்*
ஏரார் மறைப்பொருள் எல்லாம் எடுத்து இவ்வுலகுய்யவே*
சேராமற் சொன்ன அருள்மாரி பாதம் துணைநமக்கே.

*(ஒவ்வொரு வரிக்கும் கோஷ்டி மாறி சேவிக்கவும்)*

2672:
ஒரு பேருந்தி இருமலர்த் தவிசில்,*
ஒருமுறை அயனை ஈன்றனை,* ஒருமுறை—
இருசுடர் மீதினில் இயங்கா,* மும்மதிள்—
இலங்கை இருகால் வளைய,* ஒருசிலை—
ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய் வாளியின்—
அட்டனை,* மூவடி நானிலம் வேண்டி,*
முப்புரி நூலொடு மானுரியிலங்கு—
மார்வினின்,* இருபிறப்பு ஒருமாணாகி,*
ஒருமுறை ஈரடி, மூவுலகு அளந்தனை,*
நால்திசை நடுங்க அஞ்சிறைப் பறவை—
ஏறி,* நால்வாய் மும்மதத்து இருசெவி—
ஒருதனி வேழத்து அரந்தையை,* ஒருநாள்—
இருநீர் மடுவுள் தீர்த்தனை,* முத்தீ—
நான்மறை ஐவகை வேள்வி,* அறுதொழில்—
அந்தணர் வணங்கும் தன்மையை,* ஐம்புலன்—
அகத்தினுள் செறுத்து,* நான்குடன் அடக்கி—
முக்குணத்து இரண்டவை அகற்றி,* ஒன்றினில்—
ஒன்றி நின்று,* ஆங்கு இரு பிறப்பறுப்போர்—
அறியும் தன்மையை,* முக்கண் நால்தோள்—
ஐவாய் அரவோடு* ஆறுபொதி சடையோன்—
அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை,*
ஏழுலகு எயிற்றினில் கொண்டனை,* கூறிய—
அறுசுவைப் பயனும் ஆயினை,* சுடர்விடும்—
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை,* சுந்தர—
நால்தோள் முந்நீர் வண்ண,* நின் ஈரடி—

ஒன்றிய மனத்தால்,* ஒருமதி முகத்து–
மங்கையர் இருவரும் மலரன,* அங்கையில்–
முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை,*
நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை,*
மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே,*
அறுபதமுரலும் கூந்தல் காரணம்*
ஏழ்விடை அடங்கச் செற்றனை,* அறுவகைச்–
சமயமும் அறிவரு நிலையினை,* ஐம்பால்–
ஓதியை ஆகத் திருத்தினை,* அறமுதல்–
நான்கு அவையாய் மூர்த்தி மூன்றாய்*
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து–
நின்றனை,* குன்றா மதுமலர்ச் சோலை–
வண்கொடிப் படப்பை,* வருபுனல் பொன்னி–
மாமணி அலைக்கும்,* செந்நெல் ஒண்கழனித்–
திகழ்வன முடுத்த,* கற்போர் புரிசைக்–
கனக மாளிகை,* நிமிர்கொடி விசும்பில்–
இளம்பிறை துவக்கும்,* ## செல்வம் மல்கு தென்–
திருக்குடந்தை,* அந்தணர் மந்திர மொழியுடன்–
வணங்க,* ஆடரவமளியில் அறிதுயில்–
அமர்ந்த பரம,* நின் அடியிணை பணிவன்–
வருமிடர் அகல மாற்றோ வினையே. (2)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

இடங்கொண்ட நெஞ்சதிணங்கிக் கிடப்பன்* என்றும் பொன்னித்–
தடங்கொண்ட தாமரை சூழும் மலர்ந்த தண்பூங்குடந்தை*
விடங்கொண்ட வெண்பல் கருந்துத்தி செங்கண் தழலுமிழ்வாய்*
படங்கொண்ட பாம்பணைப் பள்ளி கொண்டான் திருப்பாதங்களே.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.